பொன்னி வெளியீடு

53/35

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 SEP 1951
MADRAS

4

# தபாலாபீஸ் வினோதங்கள்

- க. சண்முகசுந்தரம் -

முதற்பதிப்பு: ஆகஸ்ட் 1951

X31
N51

விலை அணா 8

ARCHIVES
110370
MADRAS

வெளியிடுவோர் :

**பொன்னி லிமிடெட்**

16, சேணியம்மன் கோவில் தெரு,
தண்டையார்ப்பேட்டை
சென்னை-21

சென்னை பொன்னி அச்சகத்தில் அச்சிடப்பெற்றது.

16 SEP 1951
MADRAS

# முன்னுரை

"தபாலாபீஸ் விநோதங்கள்" என்னும் தலைப்பில் வெளிவரும் இச்சிறு நூல் திட்டம்போட்டு எழுதப்பட்டதல்ல. எனது தொழில்துறையில் அவ்வப்போது நிகழ்ந்த சம்பவங்களை நண்பர்களிடம் கூறி அடிக்கடி மகிழ்வதுண்டு. கேட்டுக்கொண்டிருக்கும் நண்பர்கள் தங்களைப் போலவே மற்றவர்களும் இந்த விநோத சம்பவங்களை அறிந்து மகிழ வேண்டி இவற்றைக் கட்டுரைகளாகத் தொகுத்து வெளியிடுவது நலமென்று கூறி, அந்தவகையில் என்னை உற்சாகப் படுத்தி வந்தனர். யானும் நிகழ்ந்த சம்பவங்கள் ஒவ்வொன்றையும் நினைவுபடுத்தி அவ்வப்போது கட்டுரைகளாக எழுதி 'கலைமகள்', 'ஆனந்த விகடன்', 'கல்கி' 'காவேரி', 'தமிழன்' ஆகிய பத்திரிக்கைகளின் மூலம் இந்த விநோத நிகழ்ச்சிகளை வெளியிட்டு வந்தேன். இவற்றைக் கண்ணுற்ற நண்பர்கள் இக்கட்டுரைகளை யெல்லாம் தொகுத்து ஒரு நூலாக வெளியிட்டால், அது இன்னும் சிறக்கும் என்று என்னை மேலும் தூண்டினர். இந்த எண்ணத்தைத் தமிழ்நாட்டவரின் உள்ளத்தைக் கவர்ந்து வரும் "பொன்னி" அலுவலகத்தார் இன்று உருவாக்கி, நூலைச் சிறந்த முறையில் வெளியிட முன்வந்தமைக்கு அவர்களுக்கு எனது நன்றி.

இச்சிறு நூல் படிப்பதற்கு நகைச்சுவை யளிப்பதோடு, தபாலாபீஸ் சம்பந்தப்பட்ட சில உண்மைகளை அறிந்து கொள்வதற்கும் வாய்ப்பையளிக்கும். நம்மில் பலர் தபாலாபீஸ் சம்பந்தப்பட்ட உண்மைகள் சிலவற்றை அறியாதவர்களாகவே இருக்கின்றார்கள் என்பதற்கு ஆங்காங்கு காட்டியுள்ள சில சம்பவங்களே சான்றாகும். இத்தகைய மக்களுக்கு இச்சிறு நூல் பயன்படும் என்ற நம்பிக்கையுடையேன்.

இந்த விநோத சம்பவங்களைக் கட்டுரைகளாக எழுதி வெளியிடத் தூண்டிய என் நண்பர்களுக்கும், மேற்படி கட்டுரைகளைப் பிரசுரித்து ஊக்குவித்ததோடு, மீண்டும் அவற்றைப் புத்தகமாகத் தொகுக்க உரிமை வழங்கிய பத்திரிகை ஆசிரியர்கட்கும், சம்பவங்கள் ஒவ்வொன்றுக்கும் அழகான சித்திரங்கள் தயாரித்து உயர்ந்த முறையில் புத்தகமாக வெளியிடும் "பொன்னி" அலுவலகத்தாருக்கும் என்றும் மறவாத நன்றியுடையேன்.

கோம்பை
14—5—51

க. சண்முகசுந்தரம்

## காணிக்கை

எனது அரும்பெறல் தந்தையும், இராமநாதபுரம் மாவட்டம் பாலையம்பட்டி 'ஜமீன் மானேஜராக' இருந்தவருமான உயர்திரு. வெ. கலியாணசுந்தரம் பிள்ளை அவர்கள் நினைவாக இந்நூல் காணிக்கை.

# விசித்திரப் பேர்வழிகள்!

உலகத்திலுள்ள எத்தனையோ பிரகிருதிகளில் நான் கூறப்போகும் இந்த முதல் பிரகிருதியினுடைய தினுசே வேறு. சந்தேகப் பேர்வழியென்றால் இவரைப் போலச் சந்தேகப் பேர்வழியை வேறு எங்கும் காணமுடியாது. ரொம்பச் சாதுவான கிழவர். காது கொஞ்சம் மந்தம். நம்மையும் செவிடு மாதிரி நினைத்துக்கொண்டு பலமாகச் சத்தம் போட்டுப் பேசுவார். நாம் அதைவிட இருமடங்கு சத்தம் செய்தால்தான் அவருடைய காதில் விழும். திரும்பத் திரும்ப ஒரே கேள்வியைக் கேட்டுக்கொண்டே இருப்பார். பிறருக்குத் தொந்தரவளிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் அக் கேள்விகள் கேட்கப்படுவன வல்ல. ஆனால் அவருடைய சுபாவமே அதுதான். ஒருநாள் நடந்த ருசிகரமான சம்பவத்தைக் கூறுகிறேன்.

நான் ஒரு போஸ்ட் மாஸ்டர். அன்று மேற்படி சந்தேகப் பேர்வழி என்னிடம் வந்து ஒரு கவர் வாங்கினார். அதை நான்கு தடவை திருப்பித் திருப்பிப் பார்த்தார். மேல்விலாசம் எழுதினார். கொண்டுவந்த காகிதத்தை உள்ளே வைத்தார். என்ன நினைத்தாரோ, மறுபடியும் வெளியே எடுத்து ஒருமுறை சரிபார்த்து விட்டு மறுபடியும் உள்ளே திணித்தார். நான் வேலையில்லாமல் சாவகாசமாய் உட்கார்ந்திருந்ததால் அவர் செய்வது ஒவ்வொன்றையும் கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருந்தேன். என்னிடம் கவரைக் கொடுத்து, "ஏன் சார், மேல்விலாசம் சரிதானா, பாருங்கள்". என்றார். பார்த்துவிட்டுச் "சரிதான்" என்றேன்.

அவர் : வேறொன்றும் எழுத வேண்டாமே?

நான் : வேண்டாம்.

அவர் : கவர் ஒட்டினது சரிதானே? பாதி வழியிலே விட்டுப் போகாதே?

நான் : எல்லாம் சரியாய்த்தான் ஒட்டி இருக்கிறீர்கள்.

அவர் : இன்னும் கட்டு எடுக்கலேயே?

நான் : இல்லே.

அவர் : அப்ப, தபால் பெட்டியிலே போடலாமா?

நான் : ஆகா! தாராளமாகப் போடலாம்.

அவர் : இப்பப் போட்டால் இந்தக் கட்டுலே சேர்ந்துடுமில்ல? ரொம்ப அவசரம் சார்!

நான் : இன்னும் பெட்டி திறக்கவில்லே. போடுங்கள். கட்டாயம் சேரும்.

அவர் : சார்! ரொம்ப முக்கியமான, அவசரமான கடிதம் சார் — இந்தக் கட்டுலே கட்டாயம் சேரணும் சார்!

நான் : கட்டாயம் கட்டிலே சேர்ந்திடும், யோசியாமல் போடுங்கள் சார்.

பிறகு ஒருவாறு துணிந்து கவரைக் கையிலெடுத்துக்கொண்டு அருகிலுள்ள தபாற் பெட்டியிடம் சென்றார். பெட்டியின் வாயில் கவரை வைத்துக்கொண்டு அங்கிருந்தபடியே "ஏன்சார்! பெட்டியிலே போடவா?" என்று கேட்டார். "போடுங்கள் சார், போடுங்கள்" என்று நானும் கத்தினேன். போட்டுவிட்டு என் ஜன்னலருகே வந்து மறுபடியும் சம்பாஷணையைத் துவக்கினார். "ஏன் சார்! நான் இப்பப் போட்ட கவர் இந்தக் கட்டுலே சேர்ந்திடுமில்ல! எத்தனே மணிக்குக் கட்டு அனுப்புறீக?"

நான் : 10 மணிக்கு மெயில் அனுப்புகிறோம். உங்கள் காகிதத்தையும் கட்டாயம் எடுத்து அனுப்பி விடுகிறேன்.

அவர் : சரி, சந்தோஷம். இப்பப் போட்ட காகிதம் மதுரைக்கு எப்பப் போகும்?

நான் : மத்தியானம் ஒரு மணிக்கெல்லாம் போகும்.

அவர் : டிஸ்டிரிக்ட் போர்டு ஆபீஸ் தல்லாகுளத்தில் தானே இருக்கு? மத்தியானத்திலேயே டெலிவரி ஆகிவிடுமா?

நான் : ஆமாம். டிஸ்டிரிக்ட் போர்டு ஆபீஸ் 'விண்டோ டெலிவரி' வாங்கிக்கொண்டு போகிறார்கள். அதனாலே மத்தியானமே கிடைத்துவிடும்.


அவர் : ஏன் சார்! அப்ப நம்ம காகிதத்தை டிஸ்டிரிக்ட் போர்டு பிரசிடெண்டு மத்தியானமே பார்த்து விடுவாரா?

நான் : சார், நான் டிஸ்டிரிக்ட் போர்டு பிரசிடெண்டுடைய பிரைவேட் செக்ரட்டரியில்லை. அவர் மத்தியானம் தபால் பார்ப்பாரோ பார்க்க மாட்டாரோ எனக்குத் தெரியாது. எனக்கு ஜோசியமும் தெரியாது.

அவர் : சார், கோவிச்சுக்காதிங்க. நீங்கள் போஸ்ட் மாஸ்டராச்சே, இதெல்லாம் தெரிஞ்சிருக்குமேன்னு கேட்டேன். (அவருடைய மனதில் போஸ்ட்மாஸ்டரென்றால் எல்லாம் கரைகண்டவர், எல்லாவற்றிலும் மாஸ்டர் என்ற எண்ணம் போலும்!)

நான் : எனக்குத் தெரியாது.

அவர் : சார்! ரொம்ப முக்கியமான தபால். கட்டாயம் இன்றைய மெயிலில் சேர்த்து விடுங்கள். பெட்டியில் எங்காவது சிக்கிக்கொள்ளாமல் பார்த்துக்கொள்ளுங்கள். என் மகனுக்கு ஒரு வேலை விஷயமாய் எழுதியிருக்கிறேன். பையன் படித்துவிட்டு ரொம்ப நாளாய்ச் சும்மா இருக்கான்.



இன்னும் இதுமாதிரிக் குடும்ப விஷயங்களைப் பற்றி அரைமணி நேரம் கதையளந்துவிட்டுக் கடைசியாக "தபால் பத்திரம் சார். தபால் பிரிக்கும்பொழுது நம்ம

கவரையும் கவனித்துக்கொள்ளுங்கள். போய் வாரேன், சலாம்" என்று கூறிவிட்டுச் சென்றார்.

## 2

இந்த இரண்டாவது பிரகிருதி பெரிய கோபக்காரர். கட்டுமஸ்தான தேகம்; முறுக்கி விடப்பட்ட மீசை. தமக்கு ஒன்றும் தெரியாவிட்டாலும் எல்லாம் கரை கண்டவர் மாதிரி பாவனை செய்பவர். யார் யாரிடம் எப்படி மரியாதையாய் நடந்துகொள்ள வேண்டும், என்ன பேச வேண்டும், என்ன பேசக் கூடாது என்றெல்லாம் தெரிந்தவர். இவர் ஒருநாள் தமது சொந்தக்காரர் ஒருவருக்குத் தந்தி மணியார்டர் அனுப்ப எனது ஆபீசிற்கு வந்தார். நானே மணியார்டர் பாரம் பூர்த்தி செய்து கொடுத்து வேண்டிய உதவிகள் செய்தேன். "சார்! தந்திமணியார்டர் எப்பொழுது அவர்களுக்குக் கிடைக்கும்? எனக்குத் திரும்ப ரசீது எப்பொழுது வந்து சேரும்?" எனக் கேட்டார். "அநேகமாக இன்று மாலைக்குள் கிடைக்கலாம்—(தபாலில் ரசீது வர எத்தனை நாள் செல்லுமோ அதைக் கணக்கிட்டு) ரசீது இன்னும் இரண்டு நாளில் வந்து சேரும்" என்றேன். நான் குறிப்பிட்ட நாளில் வந்தார். என்ன காரணத்தாலோ அன்று ரசீது வந்து சேரவில்லை. காரணம் கேட்டார். மணியார்டர் பட்டுவாடா ஆகும் ஊருக்கு 200 மைலுக்கு இப்பாலுள்ள நான் என்ன காரணம் கூறமுடியும்? "காரணம் தெரியவில்லை. இன்னும் இரண்டு நாட்கள் பார்ப்போம். மணியார்டர் பட்டுவாடா ஆகவில்லை யென்றால் இந்நேரம் தகவல் கிடைத்திருக்கும். ரசீது ஒருவேளை தபாலில் தாமதமாக வரலாம்" என்று சமாதானம் சொன்னேன். மறுநாள் வருவதாகக் கூறிச் சென்று விட்டார்.

மறுநாள் பொழுது எப்பொழுது விடியும் எனக் காத்திருந்தவர் போலிருந்தது அவர் அதிகாலையிலே வந்தது! கடிதங்கள் பட்டுவாடா செய்துகொண்டிருந்த தபாற் சேவகரை "ரசீது வந்ததா?" எனக் கேட்டார்.

"இல்லே" என்ற பதில் வந்ததும் நேரே என்னுடைய மேஜைக் கருகில் வந்தார். நானும், எனது நண்பர் இருவரும் பேசிக்கொண்டிருந்தோம்.



அவருடைய நடை அவருடைய குமுறிக்கொண்டிருந்த கோபத்தை நன்கு வெளிப்படுத்தியது. காலடிச் சப்தத்தைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தோம். என்னை நோக்கி "என்ன சார், போக்கிரித்தனமா பண்றீங்க? நேற்றே ரசீது வந்துவிடுமெனச் சொன்னீங்க? நேற்றும் வல்லே, இன்றைக்கும் வல்லே. தந்தி அடித்தீர்களா, இல்லையா ஐயா? பெரிய மோசடியாகவல்லவா இருக்கு? ஊரிலே எல்லாரும் பட்டினியாய்ப் பசியாய் இருக்கிறாங்கன்னுதானே தந்தி மணியார்டர் செய்தேன்?" என்று அங்கலாய்த்தார்.

நான்: ஏன் பதறுகிறீர்கள்? உங்கள் பணம் எங்கும் போய்விடாது. தந்தி மணியார்டர் அனேகமாக அன்றே கிடைத்திருக்கும். ரசீதுதான் தாமதமாகத் தபாலில் வருகிறது என நினைக்கிறேன். நானும் உங்களைப் போல 200 மைலுக்கு இப்பாலே இருக்கிறேன். எனக்கு என்ன தெரியும்?

உடனே எனது நண்பர்களை நோக்கி "சார், நீங்கள் இரண்டு பேரும் கேளுங்க, இவர் சொல்லுகிற நியாயத்தை! பதினெட்டு ரூபாய் வாங்கினரு, தந்திச்செலவு மணியார்டர் கமிஷன் என்று சொல்லி அது வேறு ஒண்ணேகால் ரூபாய் வாங்கினரு. அன்னிக்கு ரூபாய் வாங்கிமட்டும் பெட்டியிலே போடத் தெரிஞ்சுது, இன்னைக்குக் கேட்டால் எனக்குத் தெரியாது, ரசீது சாவகாசமாய்த்தான் வரும் என்கிறார். நீங்கள்தான் பஞ்சாயத்துப் பண்ணணும்" என்றார்.

"ஏனப்பா! உன்னைத் தந்தி மணியார்டர் கொண்டு வந்து கொடுக்கச் சொல்லி நான் வெற்றிலை பாக்கு வைத்து அழைத்தேனா?" என்று கேட்டுவிட்டு நான் அவருடைய அறியாமையைக் குறித்துச் சிரித்துக்கொண்டிருந்தேன். எனது நண்பர்கள் என்னைக் கேலி செய்ய ஆரம்பித்தார்கள். "என்ன போஸ்ட்மாஸ்டர் சார்! தந்தி மணியார்டரைச் சாப்பிட்டுவிட்டீர்கள் போலிருக்கிறது?" என்று தமாஷ் செய்தார்கள். நான் ஒன்றும் பதில் கூறாமல் சிரித்துக்கொண்டிருந்தேன். எனது சிரிப்பு அவருக்கு இன்னும் கொஞ்சம் ஆக்ரோஷத்தைக் கிளப்பிவிட்டது. "என்னய்யா, பெரிய மனுஷாளெல்லாம் உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்? நீங்கள் மட்டும் சிரித்துக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? நாங்கள் எல்லாம் மனிதர்களாகத் தோன்றவில்லையோ உங்களுக்கு? இதற்குத்தான் நீங்கள் இவ்வளவு படிப்புப் படித்துவிட்டுத் தந்தியெல்லாம் பாஸ் பண்ணிவிட்டுப் போஸ்ட்மாஸ்டர் வேலைக்கு வந்திருக்கிறீர்கள் போலிருக்கிறது?" என்று பட படவெனக் கோபமாகச் சொன்னார்.

இவ்வளவையும் பொறுமையுடன் உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருந்தேன். "ஏனய்யா நீர் கொடுத்த பணத்திற்குத்தான் ரசீது கொடுத்திருக்கிறோமே? அப்புறம் ஏன் எதையோ பறிகொடுத்தவர் மாதிரி பதறுகிறீர்" எனக் கேட்டேன். உடனே அவர் "உங்கள் ரசீது யாருக்கய்யா வேணும்? இந்தாங்க, உங்கள் ரசீதை வைத்துக்கொண்டு என் பணத்தைக் கொடுங்கள்" எனக் கூறிவிட்டு நான் முன்பு கொடுத்திருந்த ரசீதை மேஜை மேல் விட்டெறிந்தார். பல சரக்குக் கடை, ஜவுளிக் கடை போல் நினைத்துக்கொண்டார் போலும். ஆனால் இக்காலத்தில் அக்கடைகளில் கூட விற்ற சாமானைத் திருப்பி வாங்கிக் கொள்வதில்லை. நானும் எனது நண்பர்களும் கொல்லென்று சிரித்துவிட்டோம். "நீர் ஒன்று செய்யும். எங்கள் சூப்பிரண்டுக்காவது, போஸ்ட்மாஸ்டர் ஜெனரலுக்காவது ஒரு கம்ப்ளெயிண்ட் எழுதும். அதில் இந்த விபரத்தை எல்லாம்


எழுதிவிட்டுக் கடைசியில் போஸ்ட்மாஸ்டர் ரசீதை வைத்துக்கொண்டு பணத்தைக் கொடுக்க மறுக்கிறார் என்றும் குறிப்பிடு. அப்பொழுதுதான் எனது மேலதிகாரிகளுக்கு இப்படிப்பட்ட பிரகஸ்பதிகளும் இந்தக் கலியுகத்தில் அதுவும் 1943-ஆம் வருடத்தில் கூட இருக்கிறார்கள். போஸ்ட்மாஸ்டர்கள் இதுமாதிரி எத்தனையோ பேர்களுடன் தினசரி மாரடிக்கவேண்டியிருக்கிறது என்பதும் தெரியட்டும். விலாசம் தெரியாவிட்டால் என்னிடம் வாரும். நானே எழுதித் தருகிறேன்" என்றேன். பின்பு எனது நண்பர்கள் எடுத்துச் சொன்னதன்மேல் வீடு போய்ச் சேர்ந்தார். மறுநாள், முதல் நாளை விட அதிக உக்கிரமூர்த்தி ஸ்வரூபம் எடுத்துக்கொண்டு வந்தார். போஸ்ட்மாஸ்டரைக் கை வைத்து விடுவதென்ற அபிப்பிராயத்துடன் வந்தது போலிருந்தது அவருடைய நடை. ஆனால் என் பக்கத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்த சப்-இன்ஸ்பெக்டரைக் கண்டதும், வந்த சுவடு தெரியாதபடி திரும்பிச் சென்று விட்டார். அதற்கும் மறுநாள், அந்தத் தந்தி மணியார்டர் ரசீது, தான் பிரயாணம் செய்துவந்த எல்லா ஊர்களுடைய அடையாள முத்திரைகளோடு வந்து சேர்ந்தபடியால் அவரை மறுபடியும் சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை.

## 3

மூன்றாவது பிரகிருதி போஸ்ட்மாஸ்டரை எப்படியாவது ஏமாற்றிவிடவேண்டுமென்ற அபிப்பிராயத்துடன் வந்தவர். தமது வாக்குச் சாதுர்யத்தால் ஒரு அரையணாவாவது லாபத்துடன் திரும்பவேண்டுமென்பது அவருடைய அவா. ஒரு ரிஜிஸ்தர் தபால் கொண்டுவந்தார். தராசில் நிறுத்துப் பார்த்து ஐந்தரையணா ஸ்டாம்புகள் ஒட்டவேண்டுமென்றேன்.

"சாமி, என்னிடம் 5 அணாத்தான் இருக்கிறது. நீங்கள்தான் தயவு செய்ய வேண்டு"மென்றார்.

"என்னுடைய சொந்த ஜோலியில்லையே ஐயா கவர்ன்மென்ட் சமாச்சாரமல்லவா? ஐந்தரையணுவிற்குக் குறையாது. போய்க் கொண்டுவாரும்" என்றேன். "சாமி! நான் இருப்பது பக்கத்துக் கிராமம். இந்த அரை யணுவிற்காக நான்கு மைல் நடந்து போய் வர முடியாது. நீங்கள் பார்த்து என்ன வேண்டுமானுலும் செய்யலாம்? சாமி தயவுதான் வேண்டும்" என்ருர். நிரம்ப வேடிக்கை யாக இருந்தது அவருடைய பேச்சு. "என்னைக் கையி லிருந்து போட்டுக்கொள்ளச் சொல்கிருயா?" எனக் கேட்ட தற்கு, "ஆமா சாமி; சில சமயங்களில் எங்களைப் போல ஆட்களுக்கும் போட்டுக்கொள்ளத்தான் வேண்டும். எவ் வளவோ தொலைவிலிருந்து எங்க ஊருக்கு வேலைக்கு வந்




திருக்கிறீர்கள். இந்த ஒத் தாசை செய்யக்கூடாதா?" என்ருர். "சரிதானய்யா. உம் மைப் போல ஒரு நாளைக்கு 100 பேர் வருகிருர்கள். எல் லோருக்கும் எனது கையி லிருந்து போட்டுக்கொண் டிருந்தால் எனது சம்பளத் திற்கு மேல் செலவாகும். அதெல்லாம் முடியாது. போய் யாரிடமாவது வாங்கி வாரும்" என்றேன். "சாமி இப்படிச் சொல்லிட்டா நான் என்ன செய்கிறது?" என்று சொல்லிக்கொண்டே போஸ்ட்மாஸ்டர் பெரிய விடாக் கண்டாக இருக்கிருரே என மனதில் நினைத்துக்கொண்டு புறப்பட்டுச் சென்ருர். தற்செயலாக எச்சில் துப்புவதற் காக வெளியே வந்தேன். ஆபீசிற்குப் பக்கத்தில் மறை வாக நின்றுகொண்டு வேட்டியில் முடிந்து வைத்திருந்த முடிச்சை அவிழ்த்து அரையணு மட்டும் எடுத்துக்கொண் டிருந்தார். நான் கவனித்தும் கவனியாதது மாதிரி நாற்காலியில் வந்து அமர்ந்தேன். அவர் என்னைக் கவனிக்கவில்லை.

"சாமி, நல்ல வேளையாக எங்க ஊர்க்காரர் ஒருவர் எதிரே வந்தார். அவரிடம் கைமாத்து வாங்கிவந்தேன். இல்லாவிடில் நாலும், நாலும் எட்டு மைல் நடந்திருக்க வேண்டும். சாமிதான் ஒரேயடியாகக் குறைக்கமாட்டேனென்று பிடிவாதம் பிடித்துவிட்டீங்களே? ரசீது கொடுங்கள்" என்றார். "என்னய்யா ஒரேயடியாய்ப் புளுகுகிறீரே? சிறிது நேரத்திற்கு முன் உம் மடியிலிருந்து எடுத்ததை என் கண்ணால் பார்த்தேன். அதற்குள்ளாக முழுப் பூசணிக்காயை சோற்றில் அமுக்குகிறாயே" என்று சொன்னதும் அவருக்கு நிரம்ப வெட்கமாகப் போய்விட்டது. பேசாமல் தலைகுனிந்துகொண்டு ரசீதை வாங்கிக்கொண்டு போனார்.

## 4

மற்றொரு நாள் ஒரு கிராமவாசி வந்து "சாமி, கடுதாசி கொடுங்கோ" என்றார்.



"என்ன கடுதாசி? கார்டா, கவரா?"

"ஒவ்வொன்றும் என்ன விலை சாமி?"

"கார்டு முக்காலணா, கவர் ஒண்ணரையணா."

"சாமி, எது சீக்கிரமாப் போகுமோ அதைக் கொடுங்கோ" என்றான். எல்லோரும் கொல்லென்று சிரித்துவிட்டோம்.

## 5

ஒரு நாள், நானும் எனது நண்பர் ஒருவரும் எனது ஆபீஸிற்கு எதிரேயுள்ள கட்டிடத்தில் மேல்மாடியில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். கையில் தபால் ஒன்றை வைத்துக்கொண்டு வெகு வேகமாக ஒருவர் எனது ஆபீசிற்குச் செல்வதைக் கவனித்தோம். ஆபீசைச்

சர்வே செய்துவிட்டார் கால் மணி நேரம். எதிரேயுள்ள கண்ணைப் பறிக்கும் சிவப்புப் பெயிண்டு அடித்த தபாற் பெட்டியைக் கண்டுபிடிக்க அவருக்கு அவ்வளவு நேரம் பிடித்தது. ஆனால் தபாலை எப்படி, எந்த வழியாகப் போடுவது என்பது தெரியவில்லை. குருடர்கள் தடவிப் பார்ப்பது மாதிரி, பெட்டியில் அடிப் பாகத்திலிருந்து கையினால் தடவிக்கொண்டே வந்து கடைசியாகத் துவாரத்தைக் கண்டுபிடித்தார். மழைத் தண்ணீர் உட்புகாதபடி பாதுகாக்கும் தகட்டை உட்பக்கம் தள்ளிக்கொண்டு சுலபமாகக் கவரை உள்ளே போடுவதற்குப் பதிலாக, அத் தகட்டை வெளிப் பக்கம் இழுத்துக்கொண்டு கவரைத் திணிக்க முடியாதபடி கை ஒரு பக்கம் மாட்டிக்கொள்ள நிரம்ப அவஸ்தைப்பட்டு ஒரு வழியாகப் போட்டுவிட்டுப் பெருமூச்செறிந்தார். கவர் சிக்கிக்கொள்ளுமோ என்ற சந்தேகம் உதித்தது. பெட்டியை இந்தப் பக்கமும், அந்தப் பக்கமும் இரண்டு மூன்று தரம் ஆட்டிவிட்டு அமைதி மனதுடன் புறப்பட்டார். நானும் எனது நண்பரும் இவர் செய்த வேடிக்கையைப் பார்த்துக்கொண்டிருந்தோம். நண்பர் ஒரு தமாஷ் பேர்வழி. அவரை இன்னும் சிறிது நேரம் கலாட்டா செய்ய நினைத்துக் கூப்பிட்டார். "ஏனய்யா பெட்டியை நன்றாய் ஆட்டினீர்களா? இல்லாவிட்டால் போகவேண்டிய இடத்திற்குப் போய்ச் சேராதையா?" என்றார். "இரண்டு மூன்று தடவைதான் இலேசாக ஆட்டினேன், சிவகாசிக்குப் போட்ட காகிதம்" என்றார் அந்தப் பேர்வழி. எனது நண்பர் பின்னும் சும்மா இராமல் நிரம்ப வருத்தப்படுபவர் போல் பாவனை செய்துகொண்டு "அடாடா சிவகாசிக்குப் போட்ட காகிதமா? நீங்கள் ஆட்டினதில் மதுரைக்குக் கூடப் போயிருக்காதே? சீக்கிரமாய்ப் போய் ஆட்டுங்கள்" என்றதும் விழுந்தடித்துக்கொண்டு ஓடி, தபாற்பெட்டியைக் கட்டியிருக்கும் கம்பிகள் அறுந்து போகும்படி ஆட்டிவிட்டார். சுமார் 10 நிமிடங்கள் அவருடைய பலம் பூராவையும் உபயோகப்படுத்தி ஆட்டியதால், அவருக்குக் குபீரென்று உடம்பெல்லாம்

வியர்த்துவிட்டது. மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க ஆரம்பித்துவிட்டது. "போதுமையா நீங்கள் ஆட்டியது, இந்நேரம் உங்கள் கடிதம் போய்ச் சேர்ந்திருக்கும். இன்னும் அதிகம் ஆட்டினீர்களானல், சிவகாசிக்குப் பதிலாகக் காசிக்கே போய்விடும். அதன் பின் நீங்கள் காசிக்குச் சென்று அங்கிருக்கும் தபாற் பெட்டியை ஆட்டி, இப்பக்கம் அனுப்ப வேண்டி நேரிடும்" என நான் சொல்லி நிறுத்தவில்லையானல் அவர் இன்னும் அரை மணி நேரங்கூடத் தபாற் பெட்டியுடன் குஸ்தி போடத் தயாராயிருந்தார். எனது நண்பரும் "உங்கள் தபால் கட்டாயம் போயிருக்கும்" என்று சொன்னதன்மேல்தான் சமாதானமாக வீடு போய்ச் சேர்ந்தார்.



## 6

ஓர் ஆஜானுபாகு! முறுக்கி விடப்பட்ட மீசை அவருடைய முகத்திற்கு ஒருவிதப் பயங்கரத்தைக் கொடுத்தது. கோவைப்பழங்கள் போல் சிவந்திருந்த கண்கள் அவருடைய குடிவெறியைக் காண்பித்தன. ஓர் மழுங்கிப் போன செல்லாத நாணயத்தைக் கொண்டுவந்து கொடுத்து ஸ்டாம்பு கேட்டார். "ஐயா, காசு செல்லாது. வேறு கொண்டு வாருங்கள்" என்று மரியாதையோடு சொன்னேன். "காசு செல்லாவிட்டால் தந்தி கொடுங்கள்" என்றார். நான் "யாருக்குத் தந்தி கொடுக்க?" என்றேன். "இங்கே யாருக்கும் தந்தி கொடுக்க வேண்டாம். நேரே லண்டனில் இருக்கிற நம்ம ராஜா ஆரும் ஜார்ஜ் சக்கரவர்த்திக்கே கொடுத்துக் கேளுங்கள் — இந்தக் காசை வாங்கலாமா வேண்டாமா என்று." என்றார். குடிவெறியில் இருக்கும் அவரிடம் தகராறு செய்துகொள்ளக்கூடாதென எண்

ணிக்கொண்டு, "சரி, அப்படியே செய்வோம். ஆனால் இப்பொழுது தந்தி பேசவில்லை. எங்கேயோ மரம் விழுந்திருக்கிறது போலிருக்கிறது. நாளைக்குச் சாவகாசமாய் வாருங்கள். தந்தி சரியானதன் மேல் கேட்டுச் சொல்லலாம்" என்று சமாதானம் சொல்லி வீட்டிற்கு அனுப்பிவைத்தேன்.

## 7

ஒரு கிராமவாசி வந்து "பிரம்மச்சாரி தலை கொடுங்கள்" என்றான். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. "என்னப்பா, பிரம்மச்சாரி தலையை என்னிடம் — அதுவும் கல்யாணமாகி, பிள்ளை குட்டியுடன் இருப்பவனிடம் — கேட்கிறாயே?" எனச் சிரித்துக்கொண்டே கேட்டேன். அவன் "இல்லை, சாமி, பணம் வாங்குவதற்குக் கையெழுத்துப் போட்டுக் கொடுப்பாகல்ல அது சாமி" என்றார். "சரிதான்! பிராமிசரி நோட்டு ஸ்டாம்பு பிரமச்சாரி தலையாய்ப் போய்விட்டதா?" என்று சொல்லிச் சிரித்துவிட்டு, ரெவினியூ ஸ்டாம்பு ஒன்று கொடுத்தனுப்பினேன்.

## 8

இரவு நடுநிசி. சுமார் 12-30 மணி இருக்கலாமென நினைக்கிறேன். நன்றாக அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்தேன். ஒருவன் வந்து கதவைத் தட தடவெனப் பலமாகத் தட்டிக்கொண்டு, "சாமி, சாமி" என்று பன்முறை கூப்பிட்டான். அலறியடித்துக்கொண்டு எழுந்தேன். யாருக்கு என்ன ஆபத்தோவெனப் பயந்து போனேன். வேகமாக ஓடிவந்து வாசற் கதவைத் திறந்து "என்ன சமாச்சாரம்?" என வினவினேன். "சாமி... ஊர்க் கணக்குப் பிள்ளை அவசரமாகக் காகிதம் எழுதவேண்டுமென்று ஒரு கவர் வாங்கிவரச் சொன்னார். ஒரு கவர் கொடுங்கள்" என்றான். "என்னப்பா, உங்கள் கணக்கப் பிள்ளை தபாலை மட்டும் கொண்டுபோவதற்கு நடுராத்திரியில் ஏதாவது ஏரோப்ளேன் வருகிறதா? நாளை மத்தியானம்தானே மெயில் போகிறது? அதற்கு நடுராத்திரியில் வந்து கத்த

வேண்டிய அவசியமென்ன?" என்று கேட்டேன். "சாமி நான் என்னத்தைக் கண்டேன்? நிரம்ப அவசரமான சங்கதி என்றார். உடனே இந்த நாலு மைலும் ஓடோடியும் வந்தேன். சொன்னதைக் கேட்கவேண்டியது தானே என்னுடைய வேலை?" என்றான். "கார்டு, கவர், ஸ்டாம்பு எல்லாம் இரும்புப் பெட்டியில் இருக்கிறது. வாசலில் படுத்திரு, காலையில் எடுத்துத் தருகிறேன்" என்று சமாதானம் சொல்லிப் படுக்க வைத்தேன். "அப்புறம் சாமி, கணக்கப்பிள்ளை கோபித்தால் நீங்கள்தான் சொல்லணும்" என்று முனகிக்கொண்டே படுத்தான்.

இரண்டு நாட்கள் கழித்து அந்தக் கணக்கப்பிள்ளையைச் சந்திக்க நேரிட்டது. "என்ன சார், ராத்திரி 12 மணிக்கா உங்களுக்கு மெயில் போகிறது?" எனக் கேலியாகக் கேட்டேன். "இல்லை சார், 'அவசரமான கடிதம் — காலையில் போய் ஒரு கவர் வாங்கிக் கொண்டுவந்து கொடு. மறந்து விடாதே' என்று எச்சரித்து விட்டு 10 மணிக்குப் படுக்கச் சென்றேன். அவன் கணக்கப்பிள்ளைக்கு நிரம்ப அக்கறையாய் வேலை பார்ப்பவன் போல இரவே தங்களை வந்து தொந்தரவு செய்திருக்கிறான் — மடையன்" என்று அவனைத் திட்டினார்.




## 9

இவ்வளவு தூரம் நாகரிகம் முன்னேற்றமடைந்த பிறகு கூடச் சிலர், மணியார்டர் பாரத்துடன் அவர்கள் கொடுக்கும் பணத்தையும் அப்படியே கட்டி அந்தந்த ஊர்களுக்கு அனுப்புவதாக நினைத்துக் கொண்டிருப்பது மிகவும் ஆச்சரியத்தை அளிக்கிறது. சில நாட்களுக்கு முன்பு ஒரு நபருக்கு அவருடைய மருமகனிடமிருந்து மணியார்டர்


வந்தது. கரன்ஸி நோட்டுகளாகக் கொடுத்தேன். "என்ன ஐயா, தில்லுமாறித்தனம் பண்ணுறீங்க, என் மருமகன் எழுதியிருக்கிற கடுதாசியைப் பாருங்க ஐயா!" என்று கோபமாகக் கூறிவிட்டு அன்று அவருக்கு வந்த கடிதத்தை யும் என் முன்னே விட்டெறிந்தார். கடிதத்தின் ஒரு பகுதி வருமாறு:—

"இப்பவும் தாங்கள் விரும்பியபடி ரொம்பச் சிரமப் பட்டு நோட்டுகளை ரூபாய்களாக மாற்றி மணியார்டர் செய்திருக்கிறேன். வெள்ளிப் பணம் கிடைப்பது குதிரைக் கொம்பாயிருக்கிறது. ஆனபோதிலும் தாங் கள் வெள்ளிப் பணமாகவே வேண்டுமென்று எழுதி யிருந்தபடியால் சிரமத்தைப் பாராட்டாது மாற்றி அனுப்பியிருக்கிறேன்."

## 10

ரிஜிஸ்தர் செய்வதற்காக வந்த கிழவர் ஒருவர் என்னிடம் கவரையும் ஸ்டாம்புக்காகப் பணத்தையும் கொடுத்துவிட்டு, ரசீது எழுதுவதற்குள்ளாக வெற்றிலை போட்டுக்கொள்ள எண்ணி, தனது வெற்றிலைப் பையை மடியிலிருந்து எடுத் தார். கொஞ்சம் வெற்றிலை, பாக்கு, சுண்ணும்பு, புகையிலை முதலானவற்றை எடுத்துக்கொண்டு, அப்பையைச் சுருட்டிப் பக்கத்திலிருந்த சுவரில் பதிக்கப்பட்டிருந்த தபால்பெட்டி யின் வாயில் வைத்துவிட்டு வெற்றிலை போடத் துவங் கினர். பையை வைத்த இடம் தபால்பெட்டி யென்பது அவருக்குத் தெரியாது. பை நழுவிப் பெட்டிக்குள் விழுந் ததும் தெரியாது. என்னிடம் ரசீதை வாங்கிக்கொண்டு தேடிப்பார்த்தார். பையைக் காணும். அங்கு நின்ற இளைஞர்மேல் கண்ணோட்டத்தைச் செலுத்தினர். அவ ரைத் தவிர வேறு யாரும் ஆபீசிற்கு வரவில்லையென்று அறிந்த கிழவர், தம்மைக் கேலி செய்யும் பொருட்டு, அவ் வாலிபர்தான் பையை எடுத்து ஒளித்து வைத்துவிட்ட தாக நிச்சயம் செய்துவிட்டார்.

ஆகவே, "நேரமாச்சு, தம்பி! வீட்டுக்குப் போகணும்! எடுத்து வச்சிருக்கிறதைக் கொடுத்துடு. என்னைக் கேலி பண்ணாதே" என்று கிழவர் கேட்க ஆரம்பித்துவிட்டார். நிரபராதியான இளைஞர் விழித்தார். பாவம்! தான் ஒன்றும் எடுக்கவில்லையென்று இளைஞர் சொல்லியும் கிழவர் கேட்கவில்லை. இரண்டு பேரும் வரிந்து கட்டிக்கொண்டு சண்டை போட ஆரம்பித்துவிட்டார்கள்.



நான் எழுந்திருந்து வெளியே வந்தேன். "என்ன ஐயா, ஆபீசிலே சண்டை?" என்று கேட்டேன்.

"சாமி! நீங்க கேளுங்க! உங்ககிட்ட ரிஜிஸ்தர் செய்ய கவர் கொடுத்தேனா? இரண்டு வெத்திலை போட்டுக்கிடலாமின்னு நினச்சு என் வெத்திலைப் பையிலேயிருந்து கொஞ்சம் வெத்திலை பாக்கெல்லாம் எடுத்துக்கிட்டு, பையைச் சுருட்டி இந்த மாடத்திலே வச்சேன்! உங்ககிட்ட ரசீதை வாங்கிக்கிட்டுப் பார்த்தால், பையைக் காணோம்! இந்தப் பிள்ளையாண்டான் எடுத்து ஒளிச்சு வச்சிக்கிட்டு என்னிடம் ரகளை பண்றாரு!" என்று இளைஞரைச் சுட்டிக் காட்டினார்.

"எந்த மாடத்திலே ஐயா வச்சே?" என்று திருப்பிக் கேட்டதற்கு அக்கிழவர், தபால்பெட்டியைச் சுட்டிக் காண்பித்தார். தபால்பெட்டியை ஒரு மாடம் என்றே நினைத்துக் கொண்டிருக்கிற பிரகிருதியை என்னவென்று சொல்வது?

## 11

தபாலாபீஸ்களில் விற்பனைக்குக் கொயினா மாத்திரைகள் கொடுத்து வைத்திருப்பதால் போஸ்ட்மாஸ்டர்கள் டாக்டர் உத்தியோகமும் பார்க்கவேண்டி நேரிடுகிறது — ஒருவர் வந்து ஒரு பாக்கெட் கொயினா வாங்கினாரென்றால், அவ

ருக்கு முழு விபரமும் விளங்க எடுத்துரைப்பதற்குள் அரைமணி நேர வேலை கெட்டுப்போகும். சில மாதங் களுக்கு முன்பு கிழவர் ஒருவர் வந்து தம் பேரனுக்கு மலேரியாக் காய்ச்சல் அடிப்பதாகச் சொன்னார். ஒரு பாக் கெட் கொயினைக் கொடுத்து, கொடுக்க வேண்டிய விதத்தை யும் விபரமாகக் கூறினேன். ஒரு நாளைக்குக் குறைந்தது நான்கு அல்லது ஐந்து தடவைகளாவது ஓடிவருவார். "சாமி! என்ன சாப்பாடு கொடுப்பது?" என்று கேட்டுப் போவார். சிறிது நேரங்கழித்து வந்து இருக்கும் நிலைமை யைச் சொல்லி, "சாமி, கஞ்சி குடிக்கமாட்டே னென் கிறானே?" என்பார். துரதிருஷ்டவசமாக எங்கள் ஊரில் டாக்டர் இல்லை—டாக்டர் இருந்தாலும் அவரிடம் அனுப்பி வைக்கலாம். அவன் பரம ஏழை. டாக்டருக்குப் பணம் கொடுக்க எங்கே போவான்? ஏதோ எனக்குத தெரிந்த சில பச்குவங்களைச் சொல்லியனுப்பினேன்.

அன்று இரவு இரண்டு மணிக்குமேல் மேற்படி கிழவர் வந்து என்னை எழுப்பினார். "பையன் ஒரு மாதிரியாக இருக்கிறான் சாமி, நீங்கள் வந்து பார்த்து ஏதாவது செய்து அவனைக் காப்பாற்ற வேண்டும். நீங்கள்தாம் எங்கள் குல தெய்வம்" என்று கண்ணீர் விட்டார்.

"நான் டாக்டர் அல்லவே ஐயா, எனக்கு என்ன தெரியும்? இந்நேரத்தில் உன் வீட்டிற்கு வந்து என்னால் என்ன செய்ய முடியும்? அந்த மருந்தையே இன்னொரு வேளை கொடுத்துக் கடவுள்மேல் பாரத்தைப் போட்டுவிட்டு இரு. கடவுள் காப்பாற்றுவார்" என்றேன். அவருக்குச் சமா தானமாகவில்லை. இரங்கும் குரலில், "சாமி, நீங்கள் இப் படிச் சொல்லிவிடக்கூடாது. நீங்கள் வந்து கண்ணால் பார்த்துவிட்டு வந்தால் கூடப் போதுமானது. எனக்காக இரக்கப்பட்டு வாருங்கள்" என அழைத்தார்.

அவருடைய மனதையாவது திருப்தி செய்வோம் என்று எழுந்து அவருடைய குடிசைக்குச் சென்றேன். ஓர் ஓலைப்பாயில் சுருண்டு கிடந்தான் அந்தப் பையன். அவனுடைய நிலைமை வெகு கண்ணராவியாக இருந்தது.

ஏதோ எனக்குத் தெரிந்த சிகிச்சைகள் செய்து கிழவனுக்கும் கிழவிக்கும் சமாதானம் கூறிவந்தேன். கிழவருக்குப் பரம திருப்தி. பையனும் பிழைத்தெழுந்தான்.

நான் அன்று இரவு போய்ப்பார்த்து வந்ததனுல்தான் பையனுக்குச் சௌக்கியமானதாகக் கிழவருக்கு நம்பிக்கை. பையனும் உடம்பு தேறி, இப்பொழுது பட்டாளத்தில் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறுன். அவன் அனுப்பும் மணியார்டரைப் பெற்றுக்கொள்ள வரும்பொழுதெல்லாம் அந்தக் கிழவர், "ஏதோ சாமி கொடுத்த பிச்சை" என்று சொல்லத் தவறுவதில்லை.

# எங்கள் தொழில்

**கா**லஞ்சென்ற திரு. சத்தியமூர்த்தி அவர்கள் தம் பிரசங்கங்களில் அடிக்கடி 'சட்டம் என்பது ஒரு கழுதை" என்று குறிப்பிடுவது உண்டு. முன்னே போனால் கடிக்கும், பின்னே சென்றால் உதைக்கும். சட்டத்தையும் மீறக் கூடாது. பொதுமக்களையும் அனுசரித்துப் பொறுமையோடு நடக்க வேண்டும். எங்களில் தொழிலில் இது அனுபவ பூர்வமான உண்மை.

யாராவது ஒருவர் ரிஜிஸ்தர் செய்வதற்காக ஒரு கவர் கொண்டு வந்தால், அதை நம்மிடம் கொடுத்துப் பேசாமல் ரசீதை வாங்கிக்கொண்டு போகமாட்டார். அரை மணி நேரம் அந்த ரிஜிஸ்தர் நோட்டீஸ் யார் பேருக்கு அனுப்பப் படுகிறதோ, அவருடைய குற்றங்குறைகள், குடும்ப வரலாறுகள், இருவருக்கும் உள்ள தாவா முதலியவற்றைக் கொஞ்சம் மிகைப்படுத்தி விஸ்தரிக்க ஆரம்பித்துவிடுவார். நமக்கோ வேறு வேலைகள் ஏராளமாக இருக்கும். இருப்பினும் சாந்தமாக அவர் சொல்வது ஒவ்வொன்றிற்கும் 'உம்' கொட்டிக்கொண்டே நம் வேலைகளைக் கவனிக்க வேண்டும். நடுநடுவே அவர் செய்வதே சரி என்றும் ஒப்புக்கொள்ள வேண்டும். இல்லாவிடிலோ, "போஸ்ட் மாஸ்டர் தலைக்கிறுக்குப் பிடித்தவர், நாம் சொல்லியும் கேட்கவில்லை" என்று வருத்தப்பட்டுக் கொள்வார். நாம் காதில் வாங்கிக்கொண்டாலும் சரி, வாங்கிக்கொள்ளாவிட்டாலும் சரி, 'உம்' மட்டும் போட்டுக் கொண்டிருந்தால் அவருக்கு மனத்திருப்தி.

குமாஸ்தாக்கள் இல்லாமல் ஒரே போஸ்ட்மாஸ்டர் மட்டும் இருக்கிற இடங்களில் போஸ்ட்மாஸ்டரே எல்லா வேலைகளையும் பார்க்கவேண்டும். அவர் அஷ்டாவதானப் பயிற்சி பெற்றிருப்பது நல்லது. நான்கு பேர் மணியார்டர்களை நீட்டிக்கொண்டிருப்பார்கள். இந்தப் பக்கம் ரிஜிஸ்தர்கள், பார்சல்கள், தந்திகள் வைத்துக்கொண்டு காத்திருப்பார்கள் சிலர். ஒவ்வொருவரும் அவரவர் ஜோலிகளைச் சீக்கிரம் முடித்துக்கொண்டு போகவேண்டுமென்ற அவாவினால் ஒருவர் மேல் ஒருவர் விழுந்து நெருக்கிக்கொண்டிருப்பார்கள். தபாற்சேவகர் கடிதங்களுக்கு முத்திரை அடிக்கும் சத்தம் ஒருபுறம் காதைத் துளைக்கும். வெளியே நின்று கொண்டிருப்பவர்களில் சிலர், சும்மா அமைதியாக இராமல் சளசளவென்று ஊர் வம்பளந்து கொண்டிருப்பார்கள். இந்தச் சந்தை இரைச்சல்களுக்கிடையில் வெகு சிரமப்பட்டு வேறு ஊர்களிலிருந்து வரும் தந்திகளை வாங்கிக் கொண்டிருப்போம். எங்கள் திண்டாட்டத்தை அறியாத நண்பரொருவர், "என்னடா இது! நாம் வெகுநேரம் ஜன்னலில் காத்துக்கொண்டிருக்கிறோம். நம்மைக் கவனிக்காமல் குனிந்து எழுதிக்கொண்டே இருக்கிறாரே" என எண்ணி நமது கவனத்தைத் தம்பால் திருப்புவதற்காக, கொண்டுவந்திருக்கும் காசை ஜன்னலில் 'லொட் லொட்' என்று தட்டிக்கொண்டே "சார், சார்" எனப் பன்முறைக் கூப்பிடுவார். ஏதோ தந்தி எழுதிக்கொண்டிருக்கிறாரே, தந்திச் சத்தத்தைக் கேட்பாரா, நமது சத்தத்தைக் கேட்பாரா, நமது இடையூறான சத்தத்தால் 'தவலை போச்சு' என்பதற்குப் பதிலாகத் 'தலைபோச்சு' என்று எழுதியவன் கதை மாதிரி ஏதாவது விபரீதம் நேரிட்டுவிடக் கூடாதே என்றெல்லாம் சிந்தித்துப் பார்ப்பார் என்று நினைக்கிறீர்களா? அவர் அவசரம் அவருக்குப் பெரிது!

சில மணி நேரம் நிழலடியில் உட்கார்ந்துகொண்டு ஒரே மாதிரி வேலையைச் செய்வதில் என்ன கஷ்டம் என்று சிலர் கேட்கலாம். அதில்தான் அதிகக் கஷ்டம் இருக்கிறது

என்பது என் அபிப்பிராயம். வெளியே பல இடங்களுக்கு ஓடியாடிப் பலவித வேலைகளைச் செய்வதில் அலுப்பும் ஏற்படாது; உற்சாகமும் இருக்கும். தினசரி காலை முதல் மாலை வரை, கடிகாரத்தின் முட்கள் ஒரே மாதிரிச் சுற்றி வருவதைப் போல, ஒரே மாதிரி வேலைகளை அந்த நேரப் பிரகாரம் இருந்த இடத்திலிருந்து இயந்திரம் போலச் செய்து வருவதால் நாளடைவில் உற்சாகக் குறைவு ஏற்படுகிறது. வேலைகளைப் பாக்கியும் போட முடியாது; முன்னுடியும் செய்து வைக்கக் கூடாது. முதல் நாள் மத்தியானம் இரண்டு மணிக்கு என்ன வேலை செய்துகொண்டிருந்தோமோ அதே வேலைதான் மறுநாள் மத்தியானம் இரண்டு மணிக்கும்! சாயங்கால நேரங்களில் நண்பர்களுடன் சேர்ந்துகொண்டு உலாவவோ, பந்து விளையாடவோ போகமுடியுமென்று நினைக்கிறீர்களா? அதுவும் முடியாது. அப்பொழுதுதான் மெயில் வருகிற நேரமாகவோ, அல்லது மெயில் கட்டி அனுப்புகிற நேரமாகவோ இருக்கும். நான் கவனித்த மட்டில், ஆபீஸ் இல்லாத நேரங்களில் கார்டு, கவர் வாங்க வரும் மக்கள் தான் அதிகம். ஆபீஸ் நேரங்கள் சரியாகத் தெரியாததாலோ, அல்லது 'நம் போஸ்ட் மாஸ்டர்தானே—எப்பொழுது போய்க் கேட்டாலும் எடுத்துக் கொடுப்பார்' என்ற தைரியத்தாலோ, நான் நிச்சயமாகக் கூறுவதற்கில்லை.

ஓர் எலிமெண்டரி பாடசாலை உபாத்தியாயர் ஆபீஸ் அடைத்திருக்கிற நேரம் ஸ்டாம்பு வாங்க வந்தார். நானும் நண்பர் ஒருவரும் வாசலில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். ஸ்டாம்பு கேட்டார். "ஆபீஸ் அடைத்திருக்கிறது" என்றேன். "அடைத்திருக்கிறதா? நான் கேள்விப்பட்டதே கிடையாதே" என்று ஆச்சரியத்துடன் கூறினார். 24 மணி நேரமும் தபாலாபீஸ் திறந்திருக்குமென எண்ணினர் போலும்! "ஏன் ஐயா, நீங்கள் உங்கள் பள்ளிக்கூடத்தை 24 மணி நேரமும் திறந்து வைத்திருக்கிறீர்களா?" என்று கேட்டு அவரைச் சிறிது நேரம் ரகளை பண்

ணித் திருப்பியனுப்பினேன். ஆபீசும், வீடும் ஒன்றானதால் வாசற்கதவு எப்பொழுதும் திறந்தேயிருக்கும். "ஆபீஸ் அடைச்சாச்சு" என்று சொன்னோமானால், "இல்லையே, திறந்துதானே இருக்கிறது" என்று கேட்கிறார்கள் சிலர்.



தப்பித் தவறி என்றாவது ஒருநாள் ஏதாவது நண்பர் வீட்டிற்குச் சீட்டாடச் சென்றோமானால் பின்னாடியே நம்மைத் துரத்திக்கொண்டு, அவசரத் தந்தி கொடுக்க வேண்டுமென்று யாராவது வந்து சேருவார்கள். எல்லாம் வேடிக்கைதான்!

TAMIL NADU ARCHIVES LIBRARY
110370

# சார், தந்தி!

ஒருநாள் மாலை சுமார் ஐந்து மணியிருக்கலாம். நான்கு மணிக்கே எனது ஆபீஸ் வேலைகளெல்லாம் முடிந்துவிட்டன. ஈஸிசேரில் படுத்து இளைப்பாறிக் கொண்டிருந்தேன். ஒரு கிராமவாசி வந்து தந்தி மணியார்டர் அனுப்பவேண்டுமென்றார்.

"ஆபீஸ் வேலைகளெல்லாம் இன்றைய தினம் முடிந்துவிட்டது. இனிமேல் கொடுப்பதென்றால் எக்ஸ்பிரஸ் தந்தி மணியார்டர்தான் செய்யவேண்டும். அதற்கு அதிகச் செலவாகும்" என்றேன்.

"சாமி எவ்வளவுதான் ஆகும்? கணக்குப் பார்த்துச் சொல்லுங்கள்" என்றார். "சுமார் நான்கு அல்லது ஐந்து ரூபாய் ஆகும்" எனச் சொன்னதற்குச் "சாமி கணக்காகச் சரியாகப் பார்த்து வள்ளிசாக எவ்வளவுதான் ஆகும் என்று சொல்லிவிடுங்கள். நான் இருப்பது ஆறு மைல்களுக்கு அப்பாலுள்ள கிராமம். இதற்காக நாளை வேறு உழவை நிறுத்திவிட்டு 6 மைல் நடந்து வர முடியாது. என் வேலையெல்லாம் கெட்டுப் போகும். கூட்டியோ, குறைச்சோ போட்டு இன்னிக்கு அடிச்சிடவேண்டியதுதான்" என்றார்.

சரியாகக் கணக்குப் போட்டுப் பார்த்து "நான்கு ரூபாய்க்குக் குறையாது" என்றேன். அவர் கொஞ்சம் பேரம் பேச ஆரம்பித்தார்.

"என்ன சாமி! சம்சாரிகள் படுகிற கஷ்டத்தைக் கொஞ்சங்கூட நினைச்சுப் பார்க்காமே கண்ணை மூடிக் கொண்டு கேட்கிறிங்களே? முழி பிதுங்கிப் போகுதே சாமி,

அகவிலேயோ எவ்வளவோ ஏறிப் போச்சு. கடையிலே போய் வேட்டித்துணி எடுக்கப்போனால் நாலு முழம் ரெண்டு மூணு ரூபாய் சொல்றாங்க. மழை வேறே விவ சாயத்தைக் குட்டிச் சுவராக்குது. அதிகமாக மழை பெய்து கெடுக்குது. இல்லாவிட்டால் மழையே ஓரேயடி யாக இல்லாமல் போகுது. நாங்கள் எப்படித்தான் பிழைக் கிறதோ தெரியவில்லை. என்னமோ சாமி கொஞ்சம் ஏழை களையும் கண்ணெடுத்துப் பார்த்து இரக்கப்படுங்கள்" என்று கல்லுங் கரையும் வண்ணம் உருக்கமாகக் கூறினார்.

எனக்கே கண்ணில் ஜலம் வந்துவிட்டது. ஆயினும் அடிமை உத்தியோகஸ்தனாகிய நான் என்ன செய்ய முடி யும்? அன்பாகப் பேசலாம், அன்பாக நடத்தலாம், ஆபீஸ் இல்லாத நேரங்களில் வேண்டுமானால் ஸ்டாம்புகள் எடுத் துக் கொடுக்கலாம். மணியார்டர் பாரம், தந்தி பாரம் முதலானவைகள் பூர்த்தி செய்து கொடுக்கலாம். கட்ட ணங்களைக் குறைத்து வாங்க முடியுமோ?

"சரி, இப்படிப் பேசிக்கொண்டேயிருப்பதில் பிரயோ ஜனமில்லை. காலையில் வந்தாயானால் ஒண்ணரை ரூபாய் செலவில் போய்விடும். காலையில் கொண்டு வா" என்றேன். அவர் "இரண்டு ரூபாய் எடுத்துக்கொள்ளுங்கள், இரண் டரை ரூபாய் எடுத்துக்கொள்ளுங்கள், கடைசி முடிவாக மூன்று ரூபாய்தான் சாமி, எழுந்திருங்கள்" என்று கொஞ் சம் கொஞ்சமாகப் பேரத்தை உயர்த்திக்கொண்டே வந்தார். கடைசியாக "எழுந்திருங்கள் சாமி! நீங்கள் கேட்ட பிர காரம் நான்கு ரூபாயே எடுத்துக்கொள்ளுங்கள். கொஞ்சம் உறைச்சு மட்டும் அடியுங்கள்" என்றார்.

எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது. "உறைச்சு அடிப்ப தென்றால் தந்திக் கட்டையைக் கல்லால் அடிப்பதா, 'அல் லது ரூல் தடியால் அடிப்பதா?" எனக் கேட்டுவிட்டுத் தந்தி மணியார்டரைப் புக் செய்தேன்.

"நான் என்னத்தைக் கண்டேன்? சாமி. பலமாக உறைச்சு அடிச்சால், சீக்கிரம் பணம் போகுமென நினைத் துச் சொன்னேன். நாங்கள் நிலத்தை உழுகிறபோது

கலப்பையை அழுத்தி அமுக்கிக்கொண்டால் இன்னும் கொஞ்சம் ஆழமாய்ப் படுகிறதல்லவா! அதுமாதிரி நினைத்துக்கொண்டேன். நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள், பணம் எப்படியாவது சீக்கிரம் கிடைத்தால் சரி" என்றார்.

ஃ ஃ ஃ

ஒருநாள், 'நிச்சயதாம்பூல காரியம் முடிவு பெற்றது' என்ற வாசகத்துடன் தந்தியொன்று திருச்சிராப்பள்ளியிலிருந்து வந்தது. ஆங்கிலத்தில் எழுதியனுப்பினேன். விலாசதார் ஆங்கிலம் தெரியாதவர். ஒரு அரைகுறை ஆங்கிலம் கற்றவரிடம் கொண்டுபோய்க் காண்பித்து அர்த்தம் கேட்டிருக்கிறார்.

அந்த ஆசாமி தனக்குச் சரியாக விளங்கவில்லையெனக் கூறிக்கொள்ள வெட்கப்பட்டுக்கொண்டு, தந்தியில் வரும் ஒரு வாசகத்தை வைத்துக்கொண்டு, 'நிச்சயதாம்பூலம் செய்யச் சென்றவர்களில் முக்கியமானவர் ஒருவர் இறந்து போனதாக' அர்த்தம் கூறியிருக்கிறார். தந்தி விலாசதாரும் வேறு யாரிடமும் தந்தியைக் காட்டாமல், அவசரப்பட்டுக்கொண்டு குடும்பத்துடன் திருச்சிராப்பள்ளி செல்லப் புறப்பட்டுவிட்டார். தற்செயலாக அவர்கள் ஏறிவந்த பஸ் மெயிலானதால் எனது ஆபீஸ் முன் நின்றது. ஜன்னல் வழியாக அக்குடும்பம் காரில் உட்கார்ந்திருந்ததைக் கண்ணுற்றேன். முகக் குறிப்பால் அவர்கள் எல்லோரும் ஏதோ கவலையில் ஆழ்ந்திருப்பதையும் அறிந்தேன். 'கொஞ்ச நேரத்திற்கு முன்தானே ஓர் சுப காரியம் முடிந்துவிட்டதாகத் தந்தி வாங்கியனுப்பினோம். அவ்வாறிருக்க இவர்கள் எல்லோரும் வருத்தக் குறியுடன் எங்கோ புறப்பட்டுச் செல்லவேண்டிய அவசியமன்ன?' என ஆலோசித்தேன். ஒன்றும் புலப்படவில்லை. அத்தந்தி விலாசதாரை அழைத்து என்ன விசேடம் என வினவினேன். அவர் விபரத்தைக் கூறினார். தந்தியில் இறந்து போனதாக இருப்பதாக யாரையா அர்த்தம் கூறியது எனக் கேட்ட

தற்கு அர்த்தம் கூறிய நபரின் பெயரைக் கூறினர். "நல்ல வேலை செய்தீர்களய்யா? நிச்சயதாம்பூலம் முடிந்துவிட்ட தாகத் தந்தி கொடுத்தார்கள். ஒரு நல்ல சுப காரியம் முடிந்ததாக இருக்க எவனோ சொன்னனென்று கேட்டுக் கொண்டு, பெண்டு, பிள்ளைகளையெல்லாம் அழைத்துக் கொண்டு புறப்பட்டுவிட்டீர்களய்யா? வேறு யாரிடமாவது தந்தியைக் காட்டியிருக்கப்படாதா? பரவாயில்லை. பெண்டு பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு சந்தோஷமாக வீட்டிற்குப் போய்ச் சேருங்கள்" என்று கூறிக் காரிலிருந்து இறக்கி வீட்டிற்கு அனுப்பி வைத்தேன். காருக்கு டிக்கட் வாங்கிய பணத்தைக் கொடுக்க முடியாதெனக் கார்க்காரர் தாவா செய்தார். பின்னல் அந்த முதலாளிக்குக் கடிதம் கொடுத் தனுப்பிப் பணத்தை வாபஸ் வாங்கிக் கொடுத்தேன். அன்றைய சம்பவத்திற்குப் பிறகு ஆங்கிலம் தெரியாதவர் களுக்குத் தந்தி வந்தால் நானே தமிழ்ப்படுத்தி அனுப்பும் வழக்கத்தைக் கையாண்டு வருகிறேன்.

ஃ ஃ ஃ

ஒருநாள் மாலை சுமார் 6 மணிக்கு எக்ஸ்பிரஸ் தந்தி ஒன்று வந்தது. விலாசதார் எனக்கு மிகவும் வேண்டியவர். நெடுநாட் பழக்கமுள்ளவர். அவருடைய தம்பி இறந்து போனதாகத் தந்தி. தந்திச் சேவகன் எங்கோ சென்றிருந்தான். வேறு ஒருவரும் ஆபீஸில் இல்லை. சீக்கிரம் கொண்டுபோய்க் கொடுத்தால் அவர்கள் எல்லோரும் அடுத்த காருக்கு ஊருக்குப் போகச் சௌகரியமாக இருக்குமே என எண்ணி நானே அந்தத் தந்தியை டெலிவரி



செய்யப் புறப்பட்டேன். விலாசதார் என்னைக் கண்டதும் புன்முறுவலோடு வரவேற்று ஆசனத்தில் அமரும்படி

கூறினர். "உட்காருவது இருக்கட்டும் — தங்களுடைய தம்பி இறந்து போனதாகத் தந்தி வந்திருக்கிறது" என்று கூறி முடிக்கு முன் "ஐயையோ, போய்விட்டாயா?" என்று அலறிக்கொண்டு எதிராக நின்ற என்னை அப்படியே இறுகக் கட்டிப் பிணைத்தவாறு கதற ஆரம்பித்துவிட்டார். நானோ ஒல்லியான ஆசாமி. அவரோ ஆஜானுபாகு. எனக்கு மூச்சுத் திணறிற்று. என்னால் சிறிதும் நகர முடியவில்லை. அவருடைய கட்டைத் தளர்த்திக்கொள்ள என்னால் ஆனமட்டும் முயன்றும் முடியவில்லை. அவருக்கு மனசு சிறிது சமாதானமடைந்து சுய உணர்வை அடையும் வரையில் பேசாமல் இருக்கவேண்டியதுதான் என்ற முடிவிற்கு வந்தேன். இதற்குள்ளாக இந்தப் பேரிரைச்சலைக் கேட்டு வீட்டிற்குள்ளே இருந்த பெண்களெல்லாம் ஓடி வந்து எங்கள் இருவரையும் சுற்றி உட்கார்ந்துகொண்டு "குய்யோ முறையோ" என்று ஒப்பாரி வைக்க ஆரம்பித்துவிட்டார்கள். அடுத்த வீடு அண்டை வீட்டுக்காரர்களும் பங்கெடுத்துக்கொண்டார்கள். ஏக அமர்க்களமாகி விட்டது. நண்பருடைய பிடியிலிருந்து தப்பினாலும் பெண்களாகிய கண்டத்திலிருந்து விடுதலை கிடைக்க வழியில்லை — தந்தி ரசீதிலும் கையெழுத்து வாங்கவில்லை; ரசீதிலாவது இரு தினங்களில் வாங்கிக்கொள்ளலாம், இப்பொழுது இவர்களிடமிருந்து எப்படியாவது தப்பினால் போதுமென்றாகிவிட்டது — கடைசியாக மிகுந்த பிரயாசையின்பேரில் சமாளித்துத் தலைதப்பியது தம்பிரான் புண்ணியமென ஆபீசிற்கு வந்து சேர்ந்தேன்.

# தந்தியால் நேர்ந்த தவறு

சில வருடங்களுக்கு முன்பு இராமனுதபுரம் தபாலாபீசில் தந்திக் குமாஸ்தாவாக வேலைபார்த்து வந்தேன். அப்போது வாழ்க்கையிலே ஒரு முக்கியமான, மறக்க முடியாத சம்பவம் நடந்தது. அது மிகவும் வேடிக்கையான துங்கூட.

தினந்தோறும் பல தந்திகள் வரும். நான்தான் அவற்றை வாங்கி மேல்விலாசம் எழுதி டெலிவரி செய்யத் தந்திச் சேவகரிடம் ஒப்படைக்க வேண்டும்.

ஒருநாள், 'மாகாளியம்மை, தெற்குத் தெரு இராமனுதபுரம்' என்ற விலாசத்திற்கு ஒரு தந்தி வந்தது. அதையனுப்பியவர் வெள்ளைச்சாமி என்று ஒருவர். இந்தத் தந்தியைச் சேவகனிடம் கொடுத்தேன். அவனும் வாங்கிச் கொண்டு டெலிவரி செய்யச் சென்முன். அன்று அதிகமான தந்திகள் இல்லாததால் இந்தத் தந்தியைப் பற்றி எனக்கு நல்ல ஞாபகம் இருந்தது.

மத்தியானச் சாப்பாட்டிற்கு வீடு சென்றேன். உணவு அருந்த உட்கார்ந்ததும் எனது தங்கை வந்து குளிப்பதற்கு வெந்நீர் தயாராயிருப்பதாகச் சொன்னுள். வீட்டில் தாயாரையும் காணவில்லை.

வழக்கம்போல் காலையிலேயே குளித்துவிட்டுத்தான் ஆபீஸிற்குச் சென்றிருந்தேன். மறுபடியும் குளிக்கச் சொல்வதன் காரணம் தெரியவில்லை. இதைப்பற்றி தங்கையிடம் கேட்டேன்.

அதற்கு அவள் "அண்ணு உங்களுக்குத் தெரியாதா?" என்று சொல்லிக் கண்ணீர்விடத் தொடங்கினுள். சொல்ல

முடியாத வியப்பும் திகைப்பும் கொண்டேன். மிகுந்த பரபரப்புடன் "விஷயத்தைச் சீக்கிரம் சொல். என்ன நடந்தது? அம்மா எங்கே போயிருக்கிறாள்? எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையே? நீ ஏன் அழுகிறாய்?" என்று பல கேள்விகளைப் போட்டேன். "பெரிய அம்மாள் தவறி விட்டாள். தம்பியும் தாயாரும் 10-30 ரயிலில் புறப்பட்டுச் சென்றிருக்கிறார்கள்." என்று சொல்லி மீண்டும் அழுதாள் எனது தங்கை. "எந்தப் பெரியம்மா? காரைக்குடியில் இருக்கும் பெரியம்மாவா? எப்படித் தகவல் வந்தது?" என்று கேட்டதற்குத் தந்தி வந்தது என்று பதில் கூறினாள். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. காலையிலிருந்து தந்தி பிராஞ்சில் நான்தானே வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். என்னையறியாமல் எனது வீட்டிற்குத் தந்தி எவ்வாறு வந்திருக்க முடியும்? இதில் ஏதோ தப்பு நடந்திருக்கிறது என ஊகித்தேன்.

"சரி, தந்தி இருக்கிறதா?" என்று கேட்டேன். தங்கை எடுத்துக் கொண்டுவந்து தந்தாள். எனது கையெழுத்திலேயேதான் தந்தியும் இருந்தது. அதில் 'தாயார் இறந்துபோனாள். உடனே புறப்பட்டு வரவும்—வெள்ளைச்சாமி' என்ற வாசகங்கள் காணப்பட்டன.

எனது மனம் கலவரமடைந்தது. விலாசத்தைப் பார்த்தேன். 'மாகாளியம்மை, தெற்குத் தெரு, இராமநாதபுரம்' என்று போட்டிருந்தது. எனக்கு உண்மை விளங்கியது.



மாகாளியம்மைக்குப் பதிலாக எனது தாத்தாவான மகாலிங்கம் பிள்ளையிடம் தந்திச் சேவகன் தந்தியைக் கொடுத்துவிட்டான். எனது பெரியப்பாவின் மகன் பெயரும் வெள்ளைச்சாமியானதால் இந்த மாதிரியான நிலைமை ஏற்பட்டது.

எனது தாத்தாவும் அவசரத்தில் தந்தி எங்கிருந்து வந்திருக்கிறது என்றெல்லாம் கவனிக்கவில்லை.

தந்தி வந்ததோ என்னவோ, எனது தாயார், தமக்கையார், தம்பி எல்லோரும் அலறியடித்துக்கொண்டு போய்விட்டார்கள். எல்லோரும் சாயங்காலம் பெரியப்பா வீட்டை யடைந்தார்கள்.

பெண்களுடைய சமாச்சாரம் தெரிந்தது தானே? ரயிலடியிலிருந்தே தங்களுடைய ஒப்பாரியைத் தொடங்கி விட்டார்கள். வீட்டுவாசலை யடைந்ததும், அவர்களுடைய சாரீரம் உச்சஸ்தாயியை அடைந்து விட்டது.

இந்தப் பேரிரைச்சலைக் கேட்டு, வீட்டுக்குள்ளேயிருந்து எனது பெரிய அம்மாள் அலறியடித்துக்கொண்டு ஓடிவந்தாள். எல்லோரும் அப்படி அப்படியே நின்று விட்டார்கள். அழுகையும் நின்றது. அதிசயமாக அங்கும் இங்கும் பார்த்தார்கள்.

யார் இறந்துபோனதாகக் கருதிச் சென்றுர்களோ, அந்த அம்மாளே வரவேற்று உபசரித்தால் எவ்வாறு இருக்கும்? "ஏன் ஒப்பாரி வைத்தீர்கள்? யாருக்கு என்ன ஆபத்து?" என்று கேட்டாள் பெரியம்மாள். எல்லோரும் ஒருவரைப் பார்த்து ஒருவர் விழிக்கிறுர்களே ஒழியப் பதில் கூறவில்லை. பெரியம்மாளுக்கு என்ன பயமென்றுல் இவர்கள் புறப்பட்டு வந்த இடத்தில் யாருக்கும் என்ன ஆபத்தோ என்பதுதான்! சற்று நிதானப்பட்டதும் தாயார் நடந்த வரலாற்றைக் கூறினுள். "நீ உயிரோடிருக்கும்போதே, எந்தப் பாவியோ இறந்து போனதாகத் தந்தி கொடுத்து விட்டானே? போய் யார்



என்று கண்டுபிடித்து விசாரிக்க வேண்டும்.'' என்று கூறிவிட்டு அன்று மாலை ரயிலிலேயே எல்லோரும் இராமநாதபுரம் திரும்பி வந்தார்கள்.

தந்தி மாறுதலாக டெலிவரி யானதால் வந்த வினையைத் தாயாரிடம் கூறினேன். அதன்மேல்தான் தாயாருக்கும் உண்மை விளங்கியது. "உயிரோடிருக்கும் போதே பெரிய அம்மாளுக்கு அழவேண்டியதெல்லாம் அழுது முழுக்குப் போட்டு விட்டீர்கள்! ஆதலால் அவள் ஒரு கண்டத்திற்குத் தப்பி விட்டாள். அவள் இறந்தால் எப்படி அழுவீர்கள் என்பதையும் அவள் முன்னாலேயே அழுது காட்டி விட்டீர்கள்!'' என்று கேலியாகச் சொன்னேன்.

இந்தச் சம்பவம் நடந்து பல வருடங்களான போதிலும், இன்று நடந்தது போலவே இருக்கிறது. என் தாய், தங்கை எல்லோரிடமும் இதைப்பற்றி அடிக்கடி நினைவூட்டிச் சிரிப்பது வழக்கம்.

# என்ன விலாசம் பார்!

தபாலாபீஸ்களில் நடக்கும் வேடிக்கைகள் பலவற்றுள் கடிதங்களில் விநோதமான விலாசங்கள் எழுதுகிறார்களே, அதனால் ஏற்படும் வேடிக்கையும் ஒன்று. சில மாதங்களுக்கு முன், கீழே கண்ட நூதனமான விலாசம் ஒரு கவரில் எழுதப்பட்டிருந்தது கண்டு ஆச்சரியமடைந்தேன்.

"18 வருடம் 7 மாதம் 3 நாட்களுக்கு முன் இறந்து போன சுந்தரம் தங்கை சுப்பம்மாள் கையில் கொடுப்பது."

சுந்தரம் என்பது யார்? ஆண்பாலா? பெண்பாலா? எந்தத் தெரு? இவ்வாறு விலாசம் எழுதவேண்டிய அவசியம் என்ன? ஒன்றும் புரியாது திகைத்தேன். சிறிது நேரத்திற்குப் பின், காரணத்தை நானே கற்பனை செய்து கொண்டு ஆறுதலடைந்தேன். காரணம் பொருத்தம் தானா என்பதை நீங்கள் தீர்மானிப்பதற்காகக் கீழே கொடுக்கிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன்பு நான் ஒரு அமெச்சூர் நாடகத்தில் யமன் தர்பார் காட்சியில் சித்திரகுப்தனை நடிக்கும்படி நேரிட்டது. அப்போது என் பக்கத்தில் ஒரு பெரிய ஏட்டுச்சுவடிக் கட்டும் இருந்தது. அந்த ஏட்டுக் கட்டில் இறந்தவர்கள், இறக்கப் போகிறவர்கள், அவர்களுடைய வரலாறுகள், பாப புண்ணியங்கள் முதலிய எல்லா விபரங்களும் அடக்கமென்பது நடிப்பு. 'இந்தப் போஸ்ட்மாஸ்டர்தான் சித்திரகுப்தனாச்சே, அவருடைய ஏட்டுக்கட்டில்தான் எல்லா விபரங்களும் இருக்கின்றனவே! இறந்த நபரின் பெயர், வருஷம், மாதம், தேதி

மட்டும் கொடுத்துவிட்டால் அட்டவணையின் உதவியால் சுந்தரத்தின் விலாசத்தை ஏட்டிலிருந்து கண்டுபிடித்து அதன் மூலம் தங்கை சுப்பம்மாளுடைய விலாசத்தையும் அறிந்து கவரை 'டெலிவரி' செய்து கொள்ளட்டுமே!' என்று எண்ணினரோ என்னவோ?

சிலர் கார்டு, கவர்களில் மேல்விலாசம் எழுதும் கண்ணராவி கூறத்தரமன்று. பிரமாதமாக நான்கு முழத்திற்கு வளைத்து, வளைத்து முத்திரை அடிப்பதற்குக்கூட இடம் இல்லாமல் எழுதியிருப்பார்கள். ஆனால் முக்கியமாக வேண்டிய விவரங்கள் மட்டும் காணப்பட மாட்டாது. உதாரணமாக "காமாட்சியம்மாள், கோம்பை போஸ்ட், உத்தமபாளையம் சமீபம், தேனி வழி, பெரியகுளம் தாலுகா, மதுரை ஜில்லா, சென்னை ராஜதானி, இந்தியா" என்றெல்லாம் எழுதியிருப்பார்கள் ஆனால் காமாட்சியம்மாள் எந்தத் தெரு, யார் மனைவி என்ற முக்கியமான விபரங்கள் தான் இருக்காது. கோம்பையில் குறைந்தது இருபத்தைந்து காமாட்சியம்மாக்கள் இருப்பார்கள். யாரிடம் டெலிவரி செய்வது? 25 பாகங்கள் வைத்து ஆளுக்கொரு பாகம் கொடுப்பதா? தபால் சேவகர் புண்ணியம் செய்திருந்தால் எந்த மூலையிலாவது அனுப்பு விலாசம் தென்படும். பூர்வோத்திரங்கள் விசாரித்துத் தபால் சேவகர் யாரிடமாவது டெலிவரி செய்வார். இல்லையென்றால் அக்கடிதம் டெட்லெட்டர் ஆபீஸிற்கு யாத்திரை செல்லும்.




பட்டாளத்திற்குச் சென்றிருக்கும் நமது சகோதர நண்பர்கள் ஆங்கிலத்தில் விலாசம் எழுதவேண்டுமென்ற ஆசையில் ஏதோ கிறுக்கி அனுப்புகிறார்கள். "நம் பையன் பட்டாளத்திற்குப் போன பிறகு, ஆங்கிலம் கற்றுக்கொண்டுவிட்டான். விலாசமேல்

லாம் ஆங்கிலத்திலேயே எழுதி அனுப்புகிறான்." என்று பெற்றோர்கள் பெருமைப்பட்டுக்கொள்ள வேண்டுமென் பதே அவர்கள் விருப்பம்.

ஆனால் எழுதியிருப்பது ஆங்கிலம்தானா அல்லது நமக்குத் தெரியாத ஏதோ வேறு பாஷையாவெனச் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

சிப்பாய் நம்பர்கள் முதலானவைகளை வைத்துக் கொண்டு வீடு, வீடாக விசாரித்து டெலிவரி செய்ய வேண்டும்.

சிப்பாய்கள் சம்பந்தப்பட்ட மணியார்டர்கள், லெட்டர்களை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பியனுப்பக் கூடாது என்று சட்டம்.

சிலர் 'மைலாப்பூர், மதுரை ஜில்லா' என்றுகூட விலாசம் எழுதி விடுகிறார்கள். அவற்றைச் சரியாகத் திருத்த வேண்டியது எங்கள் கடமை. அவசரத்தில் சிலர் விலாசமே எழுதாமல் போட்டு விடுகிறார்களே அதற்கு மேற்சொன்னது பரவாயில்லை.

இவற்றை யெல்லாம் தினசரி பார்த்துப் பார்த்து 'என்ன விலாசம் பார்!' என்று பாடத்தான் தோன்று கிறது.

# தபாலாபீஸ் விநோதங்கள்

பெரிய நகரமும் இல்லாமல் சிறு கிராமமும் இல்லாமல் உள்ள ஒரு நடுத்தர ஊரில் உள்ள தபாலாபீஸில் நான் வேலை பார்க்க நேர்ந்தது. என்னைத் தவிர இன்னும் நான்கு கிளார்க்குகளும், ஒரு போஸ்ட்மாஸ்டரும், சிப்பந்திகளும் இருந்தார்கள். நான் அப்பொழுது மணியார்டர் பிராஞ்சில் வேலைபார்த்து வந்தேன்.

காலையில் மணியார்டர்கள் ஏராளமாக வரும். அதனால் நான் சாவகாசமாய் வம்பளந்து கொண்டிருக்க முடியாது. அச்சமயத்தில் ஒருவர் பதினைந்து ரூபாய்க்கு எழுதியிருந்த மணியார்டர் பாரத்தையும், ரூபாயையும் கமிஷனுக்காக அணா இரண்டையும் வைத்தார். அவைகளை எடுத்து மேஜையில் ஒருபுறமாக வைத்துவிட்டு, மற்றும் மணியார்டர் கொடுத்தவர்களிடம் பணம் வாங்கி ரசீதுகள் கொடுத்துக் கொண்டிருந்தேன்.

சிறிதுநேரம் கழித்து, பதினைந்து ரூபாய் மணியார்டர் ஆசாமி தமக்கு ஏன் ரசீது கொடுக்கவில்லை எனக் கேட்டார். "மணியார்டர் கமிஷன் நாலணா வைத்தாலொழிய அந்த மணியார்டர் போகாது" எனச் சொன்னேன். அதற்கு அவர், "என்ன ஐயா, நான் ரொம்ப நேரமாப் பார்த்துக் கொண்டிருக்கிறேன் எல்லோரிடமும் இரண்டணாத்தான் வாங்கினீர்கள். என்னிடம் மட்டும் நாலணாக் கேட்கிறீர்களே? நான் லேசில் ஏமாறுபவனல்ல" என்று கூறினார்.

அப்புறம்தான் வெகு நேரமாக ஜன்னலில் அவர் காத்துக் கொண்டிருந்ததன் காரணம் தெரியவந்தது. வெகு

நுட்பமாக எல்லோரும் எவ்வளவு கமிஷன் கொடுக்கிறார்களெனக் கவனித்துக் கொண்டிருந்திருக்கிறார். தற்செயலாக அவர் கவனித்த மணியார்டர்கள் பத்து ரூபாய்க்குக் குறைந்தவைகளாகவே இருந்தன. "எல்லோரும் எவ்வளவு அனுப்பினார்கள்? நீங்கள் எவ்வளவு அனுப்புகிறீர்கள்?" எனக் கேட்டேன். சில பேர் ரூ. 10, 8, 7, 7-8-0 என்று அனுப்பியதாகவும் இரண்டணாத்தான் கமிஷன் கொடுத்ததாகவும் சொன்னார்.

"உங்களுடைய பணம் அதிகமில்லையா? சடையில் ஜாஸ்தி சாமான்கள் வாங்கினால், நாம் ஜாஸ்தி பணம் கொடுப்பதில்லையா? அதுமாதிரிதானே இதுவும்?" என வினவினேன்.

"அப்படியே வைத்துக்கொண்டாலும் இன்னும் ஒரு அணாக் கொடுக்கலாம். நீங்கள் அதிகம் கேட்பது நியாயமில்லை" என்று எனக்கு நியாய போதனை செய்து, மேலும் அணா ஒன்று மட்டும் கொடுத்தார்.

அவரிடம் பேசிக்கொண்டே நான் மேலும் பத்து மணியார்டர்கள் வாங்கிவிட்டேன். தமக்கும் சீக்கிரம் ரசீது கொடுக்கவேண்டுமெனக் கேட்டார்.

"கண்டிப்பாய் மணியார்டர் கமிஷன் நாலணாவில் கொடுக்க வேண்டிய பாக்கி ஒரு அணாவைக் கொடுத்தாலொழிய, மணியார்டர் போகவே போகாது" எனக் கூறினேன். அதன்மேல் "சரி, இந்தாருங்கள் காப்பி சாப்பிடுங்கள்" எனச் சொல்லி ஒரு அணாவை வைத்தார். அதுவும் அவர் ஒரு கொடாக்கண்டனுக்கு நான் ஒரு விடாக்கண்டனாக இருந்தபடியால்தான்.

'காப்பி சாப்பிடுங்கள்' என்று அவர் சொன்னது எனக்கு வேடிக்கையாக இருந்தது. உடனே போஸ்ட்மேனைக் கூப்பிட்டு அந்த ஒரு அணாவைக் கொடுத்து, ஒரு கப் காப்பி வாங்கிவரச் சொல்லி அவர் முன்னாலேயே

அருந்திவிட்டு, "தங்கள் புண்ணியத்தில் இன்று திருப்தியாகக் காப்பி சாப்பிட்டு விட்டேன்" என்று சொல்லி ரசீதைக் கொடுத்து, அவரை அனுப்பி, எனது பையிலிருந்து ஒரு அணு எடுத்துக் கணக்கிற்குச் சேர்த்துக் கொண்டேன்.

நியாயப்படி காப்பி சாப்பிடுவதற்கு ஒரு அணு போக, மணியார்டர் கமிஷன் பாக்கி ஒரு அணுவை அவரிடமே கேட்டிருக்க வேண்டும். ஆனால் எனக்கு அச்சமயம் அவரிடம் வீண் வம்பளந்து கொண்டிருக்க நேரமில்லை. எனது நண்பர்கள் நான் செய்த வேடிக்கையைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். காப்பி சாப்பிடத்தான் காசு கொடுத்ததாக அவர் நினைத்துக் கொண்டிருப்பார் பாவம்!

ஃ ஃ ஃ

இன்னும் சில பேர் கார்டு, கவர் என்று சரியாக உச்சரிக்கத் தெரியாமல் ஹார்டு என்றும் காரடு, கரடு என்றும், கவர் கூடு என்றும் சொல்கிறார்கள்.

ஃ ஃ ஃ

ஒருவர் வந்து இஸ்திரி பண்ண வேண்டுமெனச் சொன்னார். இஸ்திரி பண்ணுவது வண்ணான் வீட்டில் தானென்றும், தபாலாபீசில் கிடையாதென்றும் சொல்லி யனுப்பினேன். ரிஜிஸ்தர் என்ற பதம் அந்தப் பாடு படுகிறது. இவற்றை விட ரெவினியூ ஸ்டாம்பு என்று கேட்பதற்குச் சில கிராமவாசிகள் உபயோகிக்கும் வார்த்தைகள் தான் மிகவும் விநோதமானவை. கிராமமுன்சீப் தலை, பாண்டிச்சேரி ஸ்டாம்பு, பிராஞ்சேரித் தலை, ரேஞ்ச் ஸ்டாம்பு என்று இன்னும் என்னென்னவோ சொல்லுகிறார்கள். கிராமமுன்சீப் தலை என்று கேட்டவனைக் கிராமச் சாவடிக்குச் சென்று கிராமமுன்சீப்பிடம் அவருடைய தலையைக் கொடுக்குமாறு கேட்கும்படி கூறி

யனுப்பினேன். அவர் அவனைக் கேலி செய்து திருப்பி யனுப்பினார்.

ஃ ஃ ஃ

ஒரு நாள் ஒரு கிராமவாசி நாலணாவைக் கொடுத்து ஏழு கார்டுகள் கேட்டு "மொத்தமாக ஏழு கார்டுகள் வாங்கும் பொழுது கொஞ்சம் குறைத்துக் கொண்டால் என்ன?" என்று கேட்டார். கத்திரிக்காய், வாழைக்காய் வாங்கும் காய்கறிக்கடை, அல்லது பலசரக்குக்கடை எனத் தபாலாபீசையும் நினைத்துக் கொண்டார் போலும்!

ஒரு பெண் தன்னுடைய சிறு குழந்தையுடன் வந்து இரண்டணாக் கொடுத்து ஒரு கார்டும் கவரும் வாங்கி விட்டு மீதி கேட்டாள். கார்டுக்கும் கவருக்கும் இரண்டணாச் சரியாகப் போய்விட்டது என்று சொன்னதற்கு, அவள் தன்னுடைய குழந்தை மீது இரக்கங் கொண்டாவது மீதி ஏதாவது காசு கொடுக்க வேண்டுமென்று பிடிவாதம் செய்தாள்.

தபாலாபீசில் வேலை பார்ப்பவர்களுக்குக் கட்டாயம் பொறுமை அதிகம் வேண்டும். இல்லையேல் இதுமாதிரி தமாஷ்களை அனுபவிக்க முடியாது.

ஃ ஃ ஃ

மணியார்டர் பாரத்துடன் பணத்தையும் கட்டி அந்தந்த ஊர்களுக்கு அனுப்புவதாக நினைத்துக் கொண்டிருப்பவர்கள் எத்தனையோ பேர்! தந்திக்குப் போட்டிருக்கும் கம்பிகள் உள்ளுக்குள் குழாயாக இருக்குமென்று நினைத்துக் கொண்டிருப்பவர்கள் எத்தனையோ பேர். கார்டு, கவர்களில் விலாசமே எழுதாமல் தபால் பெட்டியில் போட்டு விடுபவர்கள் எத்தனையோ பேர். "மகாராஜ ராஜஸ்ரீ தகப்பனார் அவர்களுக்கு இராமநாதபுரம்" என்று விலாசமிட்டு ஒரு கவர் வந்தது. தன்னுடைய தகப்பனாரை எல்லோருக்கும் தெரிந்திருக்கும் என எண்ணி

அப்படி விலாசம் எழுதினுர் போதும். ரிஜிஸ்தர் செய்ய வேண்டிய கவர்களை ஸ்டாம்பு ஒட்டி, ரிஜிஸ்தர் கிளார்க்கிடம் கொடுத்து ரசீது வாங்காமல், தபால் பெட்டியில் போட்டுவிட்டுச் செல்கிற படித்த நண்பர்களை நினைக்கும் பொழுது தான் மிகவும் வருத்தமாயிருக்கிறது.

இவ்வளவு எழுதுகிற நானே, அதாவது தபாலாபீசில் வேலைபார்க்க வருவதற்கு முன்பு, இம்மாதிரி ஒருதரம் ஏதோ ஒன்று செய்திருக்கிறேன். என்னையும் பலர் கேலி செய்தது இன்னும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

ஃ ஃ ஃ

சிலர், கவருக்கு 2 அணு ஸ்டாம்பு ஒட்டவேண்டுமென்று சொன்ஞல் "என்னய்யா, அந்த அய்யர் போஸ்ட் மாஸ்டராக இருக்கும்போது 1அணு 6பைசாதான் வாங்குவார்—நீங்கள் மட்டும் அதிகம் கேக்கிறீகளே" என்று சண்டைக்கு வந்து விடுவார்கள். அந்த அய்யர் என்பது எனக்கு முன்பு போஸ்ட்மாஸ்டராக இருந்தவரைக் குறிக்கும். "அப்பொழுதெல்லாம் ரூபாய்க்கு ஐந்து படி அரிசி தாராளமாகக் கிடைத்ததே. இப்பொழுது ரூபாய்க்கு இரண்டு படி கூடக் கிடைப்பது அரிதாக இருக்கிறதே" என்று கிண்டலாகச் சொன்னேன்.

பக்கத்தில் நின்ற ஒருவர் அதை ஆமோதித்து "ஆமய்யா, அவர் சொல்வதும் நியாயந்தானே? விலைவாசிகளெல்லாம் ஜாஸ்தியாப் போயிருச்சுல்ல. எல்லாம் ஜாஸ்தியாய் வச்சு விற்ருல் தானே அவருக்கும் கட்டும்" என்ருர். அவர் மனதில் கார்டு, கவர் விற்கும் பணமெல்லாம் என்னையே சேருகிறதென்ற எண்ணம்.

உலகத்தில் இப்படி இன்னும் எத்தனையோ பிரகிருதிகள் இருக்கின்றனர். இன்னும் ஒரே ஒரு சிறு நிகழ்ச்சியைமட்டும் குறிப்பிட்டுவிட்டு இக்கட்டுரையை முடித்துக்கொள்கிறேன்.

N51



இச்சம்பவம்தான் மிகவும் விநோதமானது. ஒரு இரவு ஏழரை மணி சுமாருக்கு வீட்டு வாசற்கதவைத் திறந்தேன். தபாற்பெட்டியின் பக்கத்தில் வெளிச்சம் தெரிந்தது. முதலில் எனக்குக் கொஞ்சம் பயமாகிவிட்டது. தபால் பெட்டியில்தான் ஒரு வேளை நெருப்புப் பிடித்து விட்டதோ எனத் திகிலடைந்தேன். பிறகு நன்றாகக் கவனித்துப் பார்த்ததில், தபாற்பெட்டியின் வெளிப்புறம் அடிப்பாகத்தில் சுமார் அரையணு விலையுள்ள சூடம் எரிந்து கொண்டிருந்தது. ஒருவன் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து கொண்டிருந்தான்.

சிறிது நேரங்கழித்து அவன் எழுந்ததும், "என்ன சங்கதி?" என்று விசாரித்தேன்.

"அய்யா, எனது மகன் பினங்கு சென்று பத்து வருஷத்திற்கு மேல் ஆகிறது. நான் எத்தனையோ கடிதங்கள் எழுதியும் பதிலில்லை. இப்பொழுது ஒரு கடிதம் இந்தத் தபாற்பெட்டியில் போட்டேன். இக்கடிதமாவது சீக்கிரம் கிடைத்து என் மகனிடமிருந்து பணமும், பதில் கடிதமும் வரவேண்டுமென்று சாமியை வேண்டிக் கொண்டேன்." என்று அவன் பதில் அளித்தான்.

"ஐயா, நீ சூடத்தைக் கொளுத்தித் தபால் பெட்டிக்குள் போடாமல் அம்மட்டோடு வெளியில் வைத்துக் கும்பிட்டதற்கு உனக்குக் கோடி நமஸ்காரம் செய்கிறேன். இது நான் செய்த பூஜா பலன். நீ சூடத்தைக் கொளுத்தி உள்ளே போட்டு லெட்டர்களை எரிக்காமல் இருந்தாயே அதுவரையில் புத்திசாலிதான்" என்று நான் அவனைப் பாராட்டினேன்.

TAMIL NADU ... EGMORE, MADRAS
110370